கருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் –கல்வி உதவித்தொகை– விடுதிகளில் தங்கி பயிலும் ஆதிதிராவிடர் /பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படும் உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை -2017-18ஆம் கல்வியாண்டு முதல் அரசு /அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கர்களுக்கு மட்டும் அனுமதியளித்து - ஆணை வெளியிடப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை (நிலை) எண்.19

நாள் : 14.03.2018
ஹேவிளம்பி வருடம் மாசி 30,
திருவள்ளுவர் ஆண்டு 2049
படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.17, ஆதி(ம)பந துறை நாள்: 14.01.2003.
2. அரசாணை (நிலை) எண்.125, ஆதி(ம)பந துறை நாள்: 08.12.2011.
3. அரசாணை (ப) எண்.44, ஆதி(ம)பந துறை நாள்: 03.03.2017.
4. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித நக எண்.ஜே2/ 8573/2017 நாள் 14.06.2017

*****

ஆணை

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், விடுதிகளில் தங்கி இளங்கலை பட்டப்படிப்பு, தொழிற்பயிற்சி பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர், மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவிகளுக்கு உயர்கல்வி சிறப்பு உதவித் தொகையாக ஆண்டிற்கு ரூ.6,500/–மும், முதுகலை பட்ட மேற்படிப்பு மற்றும் தொழில் நுட்பக் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் /பழங்குடியினர், மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவிகளுக்கு ரூ.7000/–மும் வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், உயர்கல்வி சிறப்பு உதவித் தொகையினை இளங்கலை பட்டப்படிப்பு, தொழிற்பயிற்சி படிப்பிற்கு ரூ.6,500/- லிருந்து ரூ.7500/– எனவும், முதுகலை மற்றும் தொழிற்நுட்ப கல்வி மேற்படிப்பிற்கு ரூ.7,000/-லிருந்து ரூ.8000/– எனவும் உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரராணையில், உயர்கல்வி சிறப்பு உதவித்தொகைத் திட்ட ங்களில் உள்ள அனைத்து சலுகைகளும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படுவதாலும், உயர்கல்வி உதவித்தொகை வழங்குவதினால் அரசிற்கு கூடுதலாக செலவினம் ஏற்படுகிறது என்பதாலும், 2016-2017ஆம் ஆண்டிற்கு மட்டும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்திட அனுமதியளித்தும், 2017-2018ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை தொடருவதற்கு விரிவான ஆய்விற்கு பின்னர் முடிவு செய்யப்படும் என ஆணையிடப்பட்டது.

..2..

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கல்வி நிலையங்களுடன் இணைந்த விடுதிகளில் மாணவர்களால் உணவுக் கட்டணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருந்தமையால் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி உதவித்தொகையினைக் கொண்டு மாணவர்களுக்கான படிப்புக் கட்டணம் மற்றும் இதரச் செலவுகளுடன் உணவுக் கட்டணத்தையும் அளிக்க வேண்டிய சூழ்நிலை இருந்த காரணத்தினாலும் மாணாக்கர்களுக்கு பண நெருக்கடி ஏற்பட்டு தொடர்ந்து கல்வி பயில இயலாத நிலை ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது எனவும், மேலும் அரசாணை (நிலை) எண்.92, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 11.09.2012இன்படி சுயநிதி கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு திருப்பியளிக்கப்படாத கட்டாய கட்டணத்துடன், பராமரிப்புபடி வழங்கப்படுவதால் மாணாக்கர்களுக்கு கல்வி பயில மட்டுமே இத்தொகை போதுமானதாக இருக்கும் என்பதாலும், விடுதியில் தங்கி பயிலும் மாணாக்கர்களுக்கு கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதாலும் இதனை கருத்திற்கொண்டு விடுதியில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர்களின் கல்வி பாதிக்கக்கூடாது என்பதை கருத்திற்கொண்டும் இடைநிற்றலை தவிர்க்கும் நோக்குடன் கல்வி உதவித்தொகையுடன் உயர்கல்வி சிறப்பு உதவித்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது எனவும், எனவே இம்மாணாக்கர்களுக்கு உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் நேர்வில் விடுதிக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை சிரமமின்றி செலுத்துவதற்கும் மாணவர்களின் கல்வி நலன் பாதிக்காமல் கல்வி கற்க உதவும் என்பதால் உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகை வழங்குவது அவசியமாகிறது. எனவே இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அரசு/அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ/மாணவியருக்கு உயர் கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தினை 2017-2018-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தொடர்ந்திடவும், இத்திட்டத்திற்கான செலவினம் ரூ.26,46,00,000/– (ரூபாய் இருபத்து ஆறு கோடியே நாற்பத்து ஆறு இலட்சம் மட்டும்) மாநில கணக்காய்வு தலைவரின் அதிகாரமளிப்பு ஒப்பளிப்பு பெற்று தன்பெயர் வைப்பு கணக்கில் வரவு வைத்து செலவினம் மேற்கொள்ளும் முறையினை தளர்வு செய்து தேவையின் அடிப்படையில் மாவட்டங்களுக்கு பிரித்தளித்து கருவூலத்தில் பட்டியலிட்டு செலவினம் மேற்கொள்ளவும் ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடுகிறது.

I. 2017-2018ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தினை அரசு/அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ/ மாணவியருக்கு மட்டும் சிறப்பு உதவித்தொகை அளிக்கும் வகையில் செயல்படுத்திட வேண்டும்.

II. 2016-2017 ஆம் ஆண்டு வரை கல்வி நிறுவனங்களில் சேர்க்கப்பட்டு இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்ற மாணவ /மாணவியருக்கு அவர்களது தகுதிக்கேற்ப இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும்.

III. 2017-18ஆம் கல்வியாண்டில் புதியதாக சேர்க்கப்பட்டு பயின்று வரும் மாணவ/ மாணவியருக்கு Post Matric Scholarship வழங்கிய பின்னரே தகுதிக்கேற்ப சிறப்பு உதவி தொகை வழங்கிட கருத வேண்டும்.

IV. 2017-18 ஆம் ஆண்டில் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ள தொகைகேற்ப செலவினம் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

..3..

6. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள்- KL – உயர்கல்வி சிறப்பு படிப்புதவித் தொகை திட்டத்திற்கென ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிருத்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு நிதியுதவி – 09 உதவித் தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை".
(ததொகு 2225 01 277 KL 0936)"

7. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை 2017-2018-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள் / மாவட்ட கருவூல அலுவலர்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையினை அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.13270 /நிதித்(ஆதி(ம)பந) துறை /2018, நாள் 13.03.2018–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஓட்டெம் டாய்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
இயக்குநர், கல்லூரி கல்வித்துறை,
கல்லூரி சாலை, சென்னை–6.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 6/18/35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 1/5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அலுவலர்கள்.
நகல்:–
நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது–II) துறை, சென்னை–9.
உயர் கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளரின்
முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

அரசு சார்பு செயலாளர்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009